NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2012

# TAMIL HOME LANGUAGE: PAPER II

Time: 2½ hours                                                                                80 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 9 pages. Please make sure that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions.
4. Number your answers exactly as the questions are numbered.
5. It is in your own interest to write legibly and present your work neatly.
6. Answer 2 questions from Section A, one of which must be contextual. Answer the unseen poem from Section A as well.
7. Answer 1 question from Section B and 1 question from Section C; one of the 2 questions must be a contextual question.

---

IEB Copyright © 2012

## பகுதி ஒன்று <u>கவிதை</u>

கொடுக்கப் பட்டுள்ள நான்கு கவிதைகளில் ஏதேனும் இரண்டைப் பற்றி ( 2 ) விடை தருக. அதாவது 10 + 10 = 20 + 10 ( கற்பிக்காத கவிதை ) = 30

1. **கீழ்வரும் கவிதையை நன்றாகப் படித்துப் பின் வரும் கேள்விகளுக்கு சரியான விடை எழுதுக.**



### வேற்றுமை இல்லை
(பாட்டு - தேசியகவி பாரதியார்)

வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!



பிள்ளைகள் பெற்றதப் பூனை -அவை
பேருக் கொருநிற மாகும்!

சாம்பல் நிறமொரு குட்டி-கருஞ்
சாந்து நிறமொரு குட்டி!

பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி!

எந்த நிறமிருந் தாலும் - அவை
யாவும் ஒரேதர மன்றோ?

இந்த நிறம்சிறி தென்றும் - இஃது
ஏற்றமென் றும்சொல்ல லாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை இல்லை

எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் - இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்!



1.1 **கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக.**

1.1.1 **அவை பேருக் __________ மாகும்.** (1)

1.1.2 **__________ நிறமொரு குட்டி.** (1)

1.1.3 **அதில் மானுடர் __________ இல்லை.** (1)

IEB Copyright © 2012

1.2 **சரியான விடை எழுதுக:**

1.2.1 தாய்ப் பூனை எந்த நிறம்? (1)

1.2.2 எத்தனை பூனை குட்டிகள் இருந்தன? (1)

1.2.3 வெள்ளை நிற பூனை எங்கே வளருது? (1)

1.2.4 இக்கவிதையை எழுதியவர் யார்? (1)

1.3 **உண்மை அல்லது உண்மை அல்ல என்று எழுதுக:**

1.3.1 சாம்பல் நிற தாய்ப் பூனை ஒரு வீட்டில் வளருது. (1)

1.3.2 பூனை ஆறு குட்டிகள் பெற்றது. (1)

1.3.3 சிவப்பு நிற குட்டி ஒன்று இருந்தது. (1)
**[10]**

**அல்லது/OR**

1.4 பொதுவாகப் பூனைகளைப் பற்றி 10-12 வரிகள் எழுதுக.
**[10]**

IEB Copyright © 2012 

2. **கீழ்வரும் கவிதையை நன்றாகப் படியுங்கள்.**

## தாயின் மணிக்கொடி

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்! (தாயின்)

1 ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல் 'வந்தே மாதரம்' என்றே
பாங்கின் எழுதித் திகழும் - செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தாயின்)

2 பட்டுத் துகிலென லாமோ? - அதில்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித் தாலும் - அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம் (தாயின்

3 இந்திரன் வச்சிரம் ஓர்பால் - அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால் (தாய்)
மந்திரம் நடுவுறத் தோன்றும் - அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ? (தாயின்)

4 கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் - எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர் அவ்வீரர் - தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பார் (தாயின்)

5 அணியணி யாயவர் நிற்கும் - இந்த
ஆரியக் காட்சியோர் ஆனந்தம் அன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும் - விறல்
பைந்திரு வோங்கும் வடிவமும் காணீர்! (தாயின்)

6 செந்தமிழ் நாட்டுப் பொருநர் - கொடுந்
தீக்கண் மறவர்கள் சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர் - தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்

IEB Copyright © 2012

2.1 **கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக:**

2.1.1 ஓங்கி வளர்ந்ததோர் __________ (1)

2.1.2 பாய்ந்து __________ பெரும்புயற் காற்று (1)

2.1.3 __________ வச்சிரம் ஓர்பால் (1)

2.2 **சரியான விடை எழுதுக:**

2.2.1 இக்கவிதையை எழுதியவர் யார்? (1)

2.2.2 எது ஓங்கி வளர்ந்தது? (1)

2.2.3 எது வீசிப் பாய்ந்தது? (1)

2.2.4 பெரும்புயற் காற்று என்ன செய்தது? (1)

2.2.5 எது நடுவுறத் தோன்றும்? (1)

2.2.6 **சரியாக எழுதுக: உம்: கிங்ஓ = ஓங்கி**

(a) தைஅ (1)

(b) கள்ங்ள (1)

**[10]**

**அல்லது/OR**

2.3 மேற்கண்ட கவிதையைப் பற்றி 10-12 வரிகள் எழுதுக.

**[10]**

3. **திருக்குறள்**

3.1 திருக்குறளின் மூன்று பகுதிகள் யாவை? (3)

3.2 பின்வரும் குறள் வெண்பாக்களை நிரப்புக:

3.2.1 அகர முதல எழுத்தெல்லாம் ............ (1)

3.2.2 கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் .......... (2)

3.2.3 மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தான் .......... (2)

3.3.4 கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் ............ (2)

[**10]**

**அல்லது/OR**

3.3 திருவள்ளுவரைப் பற்றி 10-12 வரிகள் எழுதுக.

**[10]**

4. **கீழ்வரும் வரிகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக:**

அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது 'வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மதான்
எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்கும் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாம் தலைவரென் மானிடரே



| | | |
|---|---|---|
| 4.1 | மேற்கண்ட வரிகள் எந்தப் பாட்டில் வருகின்றன? | (1) |
| 4.2 | இந்தப் பாட்டை எழுதியவர் யார்? | (1) |
| 4.3 | எந்தப் பறவையைப் பற்றி எழுதியுள்ளது? | (1) |
| 4.4 | மாடன் யார்? | (1) |
| 4.5 | எந்த விலங்கைப் பற்றி எழுதியுள்ளது? | (1) |
| 4.6 | எதிர்ச்சொல் தருக: உம். அதை: இதை | |
| | 4.6.1 பின்னே: | (1) |
| 4.7 | சின்ன குயிலியைப் பர்றி 4-5 வரிகள் எழுதுக. | (4) |
| | | **[10]** |

**அல்லது/OR**

4.8 குயில் பாட்டைப் பற்றி 10-12 வரிகள் எழுதுக.

**[10]**

IEB Copyright © 2012

## 5. காணப்படாத கவிதை (Unseen Poem)

**இக்கவிதையை நன்றாகப் படித்துச் சரியான விடை எழுதுக:**

வெட்டுதல் நிறுத்தி மரங்களையே
  பட்டு விடாமல் காத்திடுவாய்!
காட்டு விலங்குக் கூட்டந்தனைக்
  கவனமொடு நீ போற்றிடுவாய்!

இயற்கை காட்டும் வழியினிலே
  இயங்கி வந்தால் நன்மைவரும்!
செயற்கை வழியில் செயல்பட்டால்
  சீரெல்லாம் அழிந்து துன்பம்வரும்

நிலங்களே வீடாய் மாறிவிடின்
  நிலத்தடி நீரும் குறைந்துவிடும்
இலக்குகள் இன்றி நடமாடி
  இயற்கையைச் சீண்ட நினையாதே!

*– கவிஞர் இலத்தூர் கி. சங்கரநாராய*

5.1 **கோடிட்ட இடங்களில் சரியான சொற்கள் எழுதுக:**

5.1.1 பட்டு ____________ காத்திடுவாய் (1)

5.1.2 செயற்கை வழியில் ___________ (1)

5.1.3 இயற்கையைச் ___________ நினையாதே (1)

5.2 **சரியான விடை எழுதுக:**

5.2.1 எதைக் கவனமொடு போற்றிட வேண்டும்? (1)

5.2.2 எப்பொழுது நன்மை வரும்? (1)

5.2.3 செயற்கை வழியில் செயல்பட்டால் என்ன ஆகும்? (1)

5.2.4 முடிவாகக் கவிஞர் என்ன சொல்கிறார்? (1)

5.3 **எதிர்ச்சொல் தருக:**

5.3.1 தீமை: (1)

5.4 **ஒருமைக்குப் பன்மை எழுதுக: உ.ம். வீடு: வீடுகள்**

5.4.1 விலங்கு: (1)

5.4.2 மரம்: (1)

**[10]**

அல்லது/OR

5.5 மேற்கண்ட கவிதையைப் பற்றி 10-12 வரிகள் எழுதுக.

**[10]**

**30 marks**

IEB Copyright © 2012 

# பகுதி இரண்டு

## கதை

1. கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக:

| | | |
|---|---|---|
| 1.1 | அன்னையும் பிதாவும் முன்னறி ___________ | (1) |
| 1.2 | ___________ தொழுவது சாலவும் நன்று | (1) |
| 1.3 | இல்லற மல்லது நல்லற ___________ | (1) |
| 1.4 | உண்டி ___________ பெண்டீர்க்கழகு | (1) |
| 1.5 | எண்ணு மெழுத்துங் கண்ணெனத் ___________ | (1) |

2. முடிவு செய்க:

| | | |
|---|---|---|
| 2.1 | ஈயார் தேட்டை ........... | (2) |
| 2.2 | ஊருடன் பகைக்கின் ........... | (2) |
| 2.3 | ........... மூவா மருந்து | (2) |
| 2.4 | ஐயம் புகினுஞ் ............ | (2) |
| 2.5 | ........... வெட்டென மற | (2) |

3. இரு நண்பர்கள் என்ற கவிதையைப் பற்றி சுமார் 10-12 வரிகள் எழுதுக. (10)

**[25]**

**அல்லது/OR**

4. "கிட்டாதாயின் வெட்டன மற" என்று கொன்றை வேந்தன் தொடரின் படி, நரியும் நண்டும் என்ற கதையை 20-25 வரிகள் எழுதுக.

**[25]**

IEB Copyright © 2012

## பகுதி மூன்று

## தங்கப் பதக்கம்

1. கீழ்வரும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கேள்விகளுக்குப் பதில் தருக:

லட்சுமி : அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். என் சொந்தக்காரங்க வீட்ல ஒரு பெண் இருக்கு. பேசி முடிச்சிடலாங்க.

சௌத் : லட்சுமி என் மகனுடைய நியாயமான சந்தோஷத்துக்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன்.

1.1 இந்த நாடகம் ஏன் தங்கப் பதக்கம் என்ற தலைப்பைப் பெற்றது. (2)

1.2 இந்த நாடகத்தின் கருத்து என்ன? (2)

1.3 உண்மை அல்லது உண்மை அல்ல என்று எழுதுக:

1.3.1 காவல் அதிகாரி தன் சொந்த மகனை சுட்டுக் கொன்றார். (2)

1.3.2 ஜகன் எப்பொழுதும் நல்லதை மட்டும் செய்வான். (2)

1.4 பன்மை தருக:

1.4.1 கவலை (2)

1.4.2 பதக்கம் (2)

1.5 ஆண்பாலுக்குப் பெண்பால் தருக:

1.5.1 ஆண்: (1)

1.5.2 கணவன்: (1)

1.5.3 திருடன்: (1)

1.6 கீழ்வரும் கதாபாத்திரங்களைப் பற்றி சுமார் ஐந்து (5) வரிகள் எழுதுக:

1.6.1 ஜெகன் (5)

1.6.2 லட்சுமி (5)

**[25]**

## அல்லது/OR

1.7 தங்கப்பதக்கம் என்ற நாடகத்தைப் பற்றி சுமார் 20-25 வரிகள் எழுதுக.

**[25]**

**50 marks**

**Total: 80 marks**

IEB Copyright © 2012